**தலைப்பு 245 – அரச நிதித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 245 – அரச நிதித் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 24 ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்ட உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 196.90 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 194.16 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 2.74 மில்லியன் அதாவது 1.39 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 194.60 | 192.43 | 2.17 | 1.12 |
| மூலதனம் | 2.30 | 1.73 | 0.57 | 24.78 |
| மொத்தம் | **196.90** | **194.16** | **2.74** | **1.39** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

அரச நிதித் திணைக்களத்திற்குரிய 24501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2.78 | 1.65 | 1.50 | 1.97 | 13.00 | 7.64 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

அரச நிதித் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்றுக்கள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 300,000 நிதி ஏற்பாடு எவ்வித பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செலவின விடயமொன்றுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டமையால் ஆண்டின் இறுதியளவில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் 31% சதவீதமாக இருந்தது.

(இ) நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக செலவின விடயமொன்றுக்கான மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்களை விஞ்சி ரூபா 334,718 ஆன பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

**3.2 கொடுக்கல் வாங்கல்களை மூடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முற்பணக் கணக்குகள்**

---

1997 யூலை 10 ஆம் திகதி மற்றும் 1998 மே 20 ஆந் திகதி முறையே 64 மற்றும் 13 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானங்களின் பிரகாரம் இரண்டு முற்பணக் கணக்கு செயற்பாடுகளை மூடி விடும் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. கீழே காட்டப்பட்டுள்ள இரண்டு முற்பணச் செயற்பாடுகளின் கொடுக்கல் வாங்கல்களை இயலுமானளவில் மூடிவிடுவதற்கான நடவடிக்கைகளை இயலுமான வரை குறுகிய காலப்பகுதியில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது.

**3.2.1 வியாபார பொருட்களை கொள்வனவு செய்யும் திணைக்களத்தின் 0999-08 ஆம் இலக்க நிர்வாகச் செலவினம் உட்பட இறப்பர், தேயிலை, தென்னை உற்பத்தி ஏனையை வியாபார திரவியங்கள் மற்றும் போர்மிக் மற்றும் அசிட்டிக் அமிலம் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பான முற்பணக் கணக்கு**

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 518(3) இன் பிரகாரம் இரண்டு ஆண்டுகளில் கொடுக்கல் வாங்கல்களை ஒடுக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 19 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் மேற்குறித்த முற்பணக் கணக்கில் கொடுக்கல் வாங்கல்களை மூடி விடுவதற்கான நடவடிக்கைகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திறைசேரி கணனி அச்சுக் குறிப்புக்களின் பிரகாரம் முற்பணக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 83,925,299 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 59,292,299 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 24,633,000 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(இ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 89,879,747 தொகையான திரட்டிய தொழிற்பாட்டு நட்டத்தை பதிவழிப்பதற்காக 2013 மார்ச் 19 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் தொடர்பான குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 30,587,488 தொகை 2013 ஆம் ஆண்டிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் திணைக்களத்தில் எஞ்சியிருந்த நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டு பதிவழிக்கப்பட்டிருந்தது. மேலும், காணப்படும் ரூபா 59,292,299 ஆன நட்டத்தை பதிவழிப்பதற்காக 2016 ஏப்ரல் 03 ஆந் திகதி திணைக்களத்தினால் தேசிய பாதீட்டு திணைக்களத்திடம் நிதி ஏற்பாடு கோரப்பட்டிருந்தது. 2016 யூன் 15 ஆந் திகதி வரையிலும் அந் நட்டத்தை பதிவழிப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தமையால் முற்பண செயற்பாடுகளை ஒடுக்குவதற்கு முடியாமல் இருந்தது.

**3.2.2 999/407 ஆம் விடய இலக்க விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தின் உள்நாட்டு மற்றும் ஏனைய உற்பத்திகளைக் கொள்வனவு செய்து கூட்டினைத்தல் மற்றும் விற்பனை, குளிரூட்டல் களஞ்சிய வசதிகளை வழங்கல் மற்றும் ஆரோக்கிய மண்டப வசதிகளை வழங்குவதற்கான முற்பணக் கணக்குகள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 518(3) இன் பிரகாரம் இரண்டு ஆண்டுகளில் கொடுக்கல் வாங்கல் தீர்க்கப்பட்டு நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்ட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 26 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் முற்பண செயற்பாடு மூடும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்கக் காணிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 454) (1)6 ஆம் பிரிவின் கீழ் விசேட கொடுப்பனவுப் பத்திரத்தின் பிரகாரம் கையளிக்கப்பட்ட சொத்துக்களை நகர அபிவிருத்தி அதிகாரசபை தமது செயற்பணிகளுக்குப் புறம்பாக ஈடுபடுத்துமாயின் மீண்டும் அந்த ஆதனங்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கு கையேற்க வேண்டியிருந்த போதிலும், அந்த ஆதனங்கள் தொடர்பில் பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) திறைசேரி கணனி அச்சீட்டு குறிப்புக்களின் பிரகாரம், திறைசேரியின் அதிகாரமளிக்கப்பட்ட முற்பணக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 222,860,785 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 222,681,406 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 179,379 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 222,681,022 திரண்ட தொழிற்படு நட்டத்தைப் பதிவழிப்பதற்காக 2013 மார்ச் 19 ஆந் திகதிய அரசாங்கக் கணக்குகள் செயற்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் 03 ஆந் திகதி திணைக்களத்தினால் தேசிய பாதீட்டு திணைக்களத்திடம் நிதி ஏற்பாடு கோரப்பட்டிருந்த போதிலும், 2016 யூன் 05 ஆந் திகதி வரையிலும் அந் நட்டத்தை பதிவழிப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது. இதனால் முற்பண செயற்பாட்டு கொடுக்கல் வாங்கல்களை மூடிவிடுவதற்கு முடியாதிருந்தது.

**3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| **(அ) சட்டரீதியான ஏற்பாடுகள்** | | |
| 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டணங்கள் (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் 4(எ) மற்றும் (ஐ) பிரிவுகள் | | மாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலையின் பிரகாரம் மட்டக்களப்பு மாநகர சபைக்குரிய 11,897,715 ஆன முத்திரை வரியை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நகரசபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருக்க வில்லை. |

**(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2009 இன் ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 15/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் 04 சுற்றறிக்கைகள் ஆங்கில மொழி மூலம் விநியோகிக்கப்பட்டிருந்தன. பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அச் சுற்றறிக்கைகளை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் இணையத்தில், திணைக்கள இணையத்தளப் பக்கத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியவில்லை. |

**(இ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை**

| | | |
|---|---|---|
| 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதி நி.தி.அ01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2015 மே 15 ஆந் திகதிய நி.அ.01/2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | டொலர் 1690 | வெளிநாட்டு அரச/மானிய நிறுவனமொன்றின் மூலம் வெளிநாட்டில் மேற்கொள்ளப்படும் பிரயாணச் செலவினம், தொலைபேசிக் கட்டணம் போன்ற அமையச் செலவினங்களை தீர்ப்பதற்காக ஏதேனும் பணம் செலுத்தப்படாத போது மாத்திரம் செலுத்த வேண்டிய அமையச் செலவினப் படிகள் அவ்வாறு வெளிநாட்டு அரசு/ நிறுவனம் மூலம் செலுத்தப்பட்டிருந்த 09 சந்தர்ப்பங்களின் போது 06 உத்தியோகத்தர்களுக்கு அது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் முழுமையாக 1690 டொலர் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

**(ஈ)**

| | |
|---|---|
| 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய நி.தி.அ.01/2010/01 ஆம் இலக்க அரச சுற்றறிக்கையின் 06(v) ஆம் பந்தி | உத்தியோகத்தரொருவர் 2015 மார்ச் 19 ஆந் திகதி முதல் 2015 ஏப்ரல் 09 ஆந் திகதி வரை சீனாவில் இடம் பெற்ற Seminar on Infrastructure Construction & Planning for Sri Lanka செயலமர்விற்கு சமூகமளித்திருந்தார். வெளிநாடு சென்று 15 நாட்கள் கடந்திருந்த போதிலும் அதற்காக திறைசேரி பிரதிச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. உத்தியோகத்தரால் வெளிநாடு சென்றமைக்கான அமையப் படியாக 1,025 ஐக்கிய அமெரிக்க டொலர் மற்றும் குளிர் தாங்கும் ஆடைப் படிகளுக்காக 75 ஐக்கிய இராச்சிய பவுண்கள் செலவினமாக மீளளிக்கப்பட்டிருந்தது. |

### 3.4 செயலாற்றல்

2015 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2013 பாதீட்டு முன் மொழிவின் பிரகாரம் நிதிப் பிரமாணக் கோவையை திருத்தம் செய்யும் செயற்பாடு இத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டங்களில் இச் செயற்பாடு பிரதான செயற்பாடொன்றாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அச் செயற்பாடு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1992 அகஸ்ட் 13 ஆந் திகதிய 2/92 ஆம் இலக்க அரச தூதுக்குழு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், இலங்கையில் இருந்த வெளிநாட்டு அரச முகவர் நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளுக்காக இந் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களை அவர்கள் மீண்டும் தனது தாய் நாட்டிற்கு திருப்பி செல்லும் போது உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்கின்றனர். அப்போது அரசிற்கு செலுத்த வேண்டிய தீர்வை தொகை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக திணைக்களம் இடைத் தரகராக செயற்பட்டிருந்தடன், அதன் பிரகாரம் விற்பனை செய்வதற்காக கோருகின்ற ஒரு வாகனத்திற்காக ரூபா 295 கட்டணமொன்று மாத்திரம் திணைக்களத்தினால் அறவிடப்படுகின்றது. மேற்குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகள் செயற்படுத்தும் நிலைமையில் இல்லாமையால் அதற்குரிய சுற்றறிக்கை திருத்தம் செய்வதற்கும் அறவிடப்பட வேண்டிய கட்டணத்தை ரூபா 1000 வரை அதிகரித்து அரச வருமானத்தை அதிகரிப்பது தொடர்பாக 2012 ஆம் ஆண்டு முதல் நிதி அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கு பதிலாக மீளாய்வாண்டின் போது எவ்வித தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 திசெம்பர் 27 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் நிதியங்களை முகாமை செய்வதற்குரிய வழிகாட்டலொன்று வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 60 நிதியங்களைக் கண்காணிக்கும் பணிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன. மேற்குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியங்களுக்கான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும், நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் அரச நிதித் திணைக்களத்திற்கும் வழங்கப்பட வேண்டியிருந்தது. கணக்காய்வு திகதியான 2016 யூலை 04 ஆந் திகதி வரை 18 நிதியங்களின் நிதிக்கூற்றுக்கள் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 திசெம்பர் 27 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் சட்டரீதியற்ற நிதியங்களை தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் அவ்வாறான நிதியங்கள் பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் சட்டரீதியாக்குவதற்கு முடியுமான வகையில் திணைக்களத்திற்கு காரணங்கள் குறிப்பிடப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தன. தம்புள்ள தவிர ஏனைய பொருளாதார நிலையங்கள் தனியார் சட்டத்தரணிகள் மூலம் தயார் செய்யப்பட்ட உறுதியொன்று மூலம் பொறுப்பு நிதியமொன்றை தாபித்து செயற்படுத்தப்பட்டு வருவதுடன் 03 பொருளாதார நிலையங்கள் அவ்வாறு தயாரிக்கப்பட்ட உறுதிகளை திணைக்களத்திற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் சேவைகள் வழங்கும் போது அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பான நடைமுறை அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு திருத்தம் செய்ய வேண்டியது திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடொன்றாக இருந்தது. 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் வேண்டுகோளின் பேரில் ஒரு உருப்படியொன்றாக அல்லது பல தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. இதனால் வேண்டுகோள்கள் சமர்ப்பிக்கப்படாத சில நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்கள் திருத்தம் செய்யப்படாமல் நீண்டகாலமாக காணப்படுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பங்கள் இல்லாமல் போயிருந்தன.

(ஊ) அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் முறைப்படி முகாமை செய்வதன் மூலம் அதன் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது உட்பட மிகை மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத சொத்துக்களை கைதவிர்ப்பதன் மூலம் அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அதிகரிக்கும் முறையொன்றை தயாரித்தல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமான முன்மொழிவு 8.51 இன் பிரகாரம் அரச நிறுவனங்களிடமுள்ள உடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத வாகனங்களை கைதவிர்ப்பதற்காக ஆலோசனைகளை வழங்கி திணைக்களத்தால் 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

சுற்றறிக்கையின் பிரகாரம், கைதவிர்க்கப்பட வேண்டியதாக இனங்காணப்பட்ட வாகனங்கள் சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்ட திகதி முதல் 03 மாதங்களுக்கு உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க கைதவிர்க்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது அவ்வாறு 172 நிறுவனங்களின் 2668 வாகனங்கள் கைதவிர்ப்பு செய்யப்பட வேண்டுமென இனங்காணப்பட்டிருந்த போதிலும் 2236 வாகனங்களுக்குரிய நடவடிக்கைகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம், ஏதேனும், நிறுவனமொன்றில் கைதவிர்ப்பதற்கு வேண்டிய வாகனங்கள் ஏதேனும் இல்லையெனின் அது தொடர்பாக கட்டாயமாக 2015 யூலை 30 இல் உள்ளவாறு அரச நிதிப் பணிப்பாளருக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், 261 நிறுவனங்களினால் அவ்வாறு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வெவ்வேறு அரச நிறுவனங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பாகவுள்ள அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுக் கூட்டங்களை செயற்படுத்துவது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வது திணைக்களத்தின் செயற்பாடொன்றாக இருந்தது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை தொடர்பாக பின்தொடர் கடிதங்கள் மாத்திரம் உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. அவ்வாறே 2015 ஆம் ஆண்டில் 52 திணைக்களங்களுக்குரிய அரசாங்க கணக்குகள் தொடர்பாக குழுக் கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் 27 செயற்குழு குறிப்புக்கள் மாத்திரம் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அதற்குரிய பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், அது நடாத்தப்பட்ட கூட்டத்தொடர்களின் 52 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டில் கிடைத்த கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பான பின் தொடர் நடவடிக்கைகளுக்காக தொடர்புபடுத்தப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 86 ஆக இருந்த போதிலும் அதில் 02 இற்கு மாத்திரம் பதில் கிடைக்கப் பெற்றிருந்தது.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகள் மீளாய்வாண்டின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 18 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 35 | 31 | 05 | 01 |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 17 | - | - |
| | மொத்தம் | 83 | 67 | 17 | 01 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடக்கணக்காக திட்டமிடல் செயற்படுத்தும் உதவியாளர் பதவிகளின் கீழ் மூன்று உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் முறையான அங்கீகாரமொன்று கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ii) சிரேஷ்ட மட்டத்தில் 2 பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டில் வெளிநாட்டு செயலமர்வுகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் தனிப்பட்ட சுற்றுலாக்களுக்காக வெளிநாடு சென்ற 29 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமை இதனால் இரண்டு பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை திணைக்ளத்தின் செயலாற்றல் தொடர்பாக தாக்கமொன்று செலுத்த வில்லையென அவதானிக்கப்பட்டது.